# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC.32/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | **அ.சா.1** |
| Name | : | **சுதாஸ்** |
| Father's/Husband Name: | | **செல்வராஜ்** |
| Village | : | **பெரியம்மாபாளையம்** |
| Taluk | : | **வேப்பந்தட்டை** |
| Age | : | 38/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 28.03.2024.

**(1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. P. தேன்மொழி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் A2–மகேந்திரன், A3– வெங்கடேஷ் ஆஜர். A1– ரத்தினசாமி ஆஜர் இல்லை. )**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது பசும்பலூர் VAO–ஆக வேலை பார்த்து வருகிறேன். ப.சா.1–அன்பரசனை தெரியும். அவர் வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்த வகையில் எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சம்பவத்தின் போது ஆஜர் எதிரிகளையும் அவர்களுடன் மற்றும் இரண்டு பேரையும் பார்த்தேன். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகாத வழக்கின் எதிரி ரத்தினசாமி மற்றும் மற்றொரு எதிரியான வேலாயுதம் என்பவர்களை எனக்கு பார்த்தால் அடையாளம் தெரியும். பெயர் தெரியாது. 25.01.2022 அன்று சுமார் மாலை 4 மணியளவில் நானும், VAO–ரேகா, VAO–பாரிவேந்தன், RI –அன்பரசன் உள்ளிட்டோர் வேப்பந்தட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் Election சம்மந்தமான வேலை பார்த்து கொண்டிருந்தோம்.

ii) சிறுநிலா கிராமத்தை சேர்ந்த ஆஜர் எதிரிகளுடன் சேர்ந்து மொத்தம் 4 நபர்கள் வந்து RI–அன்பரசனிடம் வெள்ளை தாளைகாட்டி கையெழுத்து போடுங்கள் என்று கேட்டார்கள். அதற்கு அவர் தற்போது விண்ணப்பங்கள் அனைத்தும் Online ல் கொண்டுவரப்பட்டது என்றும் Online ல் apply செய்தால் சான்றிதழில் கையொப்பம் போடுகிறேன் என்று சொன்னார். கையெழுத்து போட்டாக வேண்டும் என்று வற்புறுத்தி 4 நபர்களில் ஒருவர் ஆஜர் எதிரிகள் அல்லாத நபர் பேப்பரை தூக்கி வீசினார். கையால் அடித்தார் அதில் RI–யின் கண்ணாடி உடைந்துவிட்டது. கெட்ட வார்த்தையில் 4 எதிரிகளும் திட்டினார்கள். அவர்கள் அனைவரும் மது அருந்தி போதையில் இருந்தார்கள். இந்த இடத்தை விட்டு கையொப்பம் போடாமல் போவாய் என்று RI–ஐ மிரட்டி RI–ஐ கீழே தள்ளி காலால் மிதித்தார்கள். கையில் வைத்திருந்த கம்பியை காட்டி மிரட்டினார்கள். சத்தம் கேட்டு மற்ற அலுவலர்கள் வந்துவிட்டார்கள். RI –அன்பரசன் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) எதிரிகள் தரப்பு வழக்கறிஞருக்காக வழக்கறிஞர் திரு. வேல்முருகன் பிரதிநிதித்துவம் செய்தார். போதுமான வாய்ப்பளிக்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை இல்லை. சாட்சியம் முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | |
|---|---|
| Calendar Case No: | CC.32/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.2 |
| Name : | பாரிவேந்தன் |
| Father's/Husband Name: | பாண்டுரங்கன் |
| Village : | ராமநாதபுரம் |
| Taluk : | தலைவாசல் |
| Age : | 30/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 28.03.2024.

**(1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. P. தேன்மொழி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் A2–மகேந்திரன், A3– வெங்கடேஷ் ஆஜர். A1– ரத்தினசாமி ஆஜர் இல்லை. )**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது பிம்பலூர் கிராம VAO –ஆக உள்ளேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்களும் அவர்களுடன் சேர்ந்த இருவரும் தான் RI–அன்பரசனை சம்பவத்தின் போது அடித்தார்கள். மற்ற இருவரின் பெயர் தெரியாது. பார்த்தால் அடையாளம் தெரியும். 25.01.2022 ம் தேதி வேப்பந்தட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் மாலை 3 மணிக்கு மாத பயிர் சாகுபடி சம்மந்தமாக கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்போது RI–அன்பரசன் இருந்தார். VAO–கள் நானும், பசும்பலூர் VAO–சுதாஸ், பெரியவடகரை VAO–ரேகா ஆகியோர் இருந்தோம். அப்போது ஆஜர் எதிரிகளும் அவர்களுடன் சேர்ந்து மற்ற இருவரும் RI–அன்பரசனிடம் கையொப்பம் போடும்படி கேட்டுகொண்டு இருந்தார்கள். அதற்கு அவர் கூட்டம் முடிந்த பின்னிட்டு பேசலாம் என்றும்,Online ல் Apply செய்யுங்கள் நீங்கள் நினைத்த படி சான்றிதழை

வழங்கமுடியாது என்று சொன்னார். அதற்கு எதிரிகள் மறுத்து கையொப்பம் போட்டாக வேண்டும் என்று Force செய்தார்கள்.

ii) எதிரிகளில் ஒருவரான இன்று நீதிமன்றத்தில் ஆஜராகாத நபர் (அவர் ஒல்லியாக இருந்தார்) RI–அன்பரசனின் கன்னத்தில் அறைந்து விட்டார். கையில் வைத்திருந்த பேப்பரை தூக்கி அவர்மீது போட்டார். நான் சம்பவத்தை பார்த்துவிட்டு தாசில்தாரை அழைக்க சென்றேன் திரும்பி வந்த போது எதிரிகள் கத்தி கொண்டிருந்தனர். RI அன்பரசன் கீழே கிடந்தார். கேட்டதற்கு எதிரிகள் கீழே தள்ளி தன்னை மிதித்துவிட்டதாக சொன்னார். இது தொடர்பாக அவர் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) எதிரிகள் தரப்பு வழக்கறிஞருக்காக வழக்கறிஞர் திரு. வேல்முருகன் பிரதிநிதித்துவம் செய்தார். போதுமான வாய்ப்பளிக்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை இல்லை. சாட்சியம் முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | |
|---|---|
| Calendar Case No: | CC.32/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.3 |
| Name : | ரேகா |
| Father's/Husband Name: | செல்வகுமார் |
| Village : | பாரதிநகர், கோனேரிபாளையம் |
| Taluk : | பெரம்பலூர் |
| Age : | 37/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 28.03.2024.

**(1969-ம் ஆண்டின் 54 வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. P. தேன்மொழி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் A2-மகேந்திரன், A3- வெங்கடேஷ் ஆஜர். A1- ரத்தினசாமி ஆஜர் இல்லை. )**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது பாண்டகபாடி கிராம VAO -ஆக வேலை பார்க்கிறேன். சம்பவத்தின் போது பெரியவடகரை VAO-ஆக வேலை பார்த்தேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்களும் அவர்களுடன் சேர்ந்த இருவரும் ஆக 4 பேர்கள் தான் RI-அன்பரசனை சம்பவத்தின் போது அடித்தார்கள். மற்ற இருவரின் பெயர் தெரியாது. பார்த்தால் அடையாளம் தெரியும். 25.01.2022 ம் தேதி வேப்பந்தட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் மாலை 4 மணிக்கு Election சம்மந்தமாக கூட்டம் என்று சொல்லி நாங்கள் வந்திருந்தோம். அப்போது RI-அன்பரசன் இருந்தார். VAO-கள் நானும், பசும்பலூர் VAO-சுதாஸ், VAO-பாரிவேந்தன் ஆகியோர் இருந்தோம். அப்போது ஆஜர் எதிரிகளும் அவர்களுடன் சேர்ந்து மற்ற இருவரும் 4 பேரும் சேர்ந்து RI-அன்பரசனிடம் பேப்பரை காட்டி கையொப்பம் போடும்படி கேட்டுகொண்டு இருந்தார்கள். அதற்கு

அவர் Online ல் ஏற்றி விடுங்கள் பேப்பரில் Manual ஆக போட முடியாது என்று சொன்னார். அதற்கு எதிரிகள் மறுத்து கையொப்பம் போட்டாக வேண்டும் என்று கூறி பேப்பரால் அடித்து கையால் கன்னத்தில் அறைந்தார்கள். அதில் RI ன் கண்ணாடி உடைந்துவிட்டது. எதிரிகள் நால்வரும் போதையில் இருந்தார்கள். எதிரிகள் நால்வரும் அசிங்கமாக RI அன்பரசனை திட்டி கம்பியை காட்டி கையொப்பம் போட்டாக வேண்டும் என்று மிரட்டினார்கள். சத்தம் கேடடு வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்த அலுவலரகள் அனைவரும் வந்துவிட்டார்கள். RI அன்பரசன் கீழே விழுந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) எதிரிகள் தரப்பு வழக்கறிஞருக்காக வழக்கறிஞர் திரு. வேல்முருகன் பிரதிநிதித்துவம் செய்தார். போதுமான வாய்ப்பளிக்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை இல்லை. சாட்சியம் முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை